முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1208

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.01.2023**, வியாழக்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
   ஞானிகள் துணைகொண்ட தேசிகனே
   தானதர்மத்தின் மகா சக்தி வடிவாக
   தரணியில் அவதாரம் புரிந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் தை மாதம் 05 ம் நாள் 19.01.2023, வியாழக்கிழமை)
   வரமென அரங்கன் உபதேசத்தின் மூலம்
   வையகமே நல் மாற்றங்காணக்கூடும்
3. கூடாத மாச்சர்யங்கள் கொடுமைகள் அனைத்தும்
   குவலயத்தை விட்டு அரங்கன் தயவாலே அகன்றோடும்
   ஓடவே அரங்கனை தொடர்ந்துவரும்
   உயர் தொண்டர் மூலமாக குவலயத்தில் தொண்டர்படை பெருக்கி
4. பெருக்கியே ஞானவான்கள் என்கின்ற தலைமையை
   பிசகின்றி இந்த கலியுகத்தில் நடத்தி வைப்பேன்
   இடரின்றி அரங்க மகானின் இணையில்லாத ஞானசக்தி என்கின்ற வேலிக்குள் வர
   துணையின்றி தவிக்கின்ற மக்களெல்லாம் தேசிகன் அருட்துணைகூடி இனிதே உயரநேரும்
5. நேர்மைகொண்டு அரங்கன் தொடர்புக்கு வந்தால்
   நிலவுலகில் ஞானியாகும் வாய்ப்பு அனைவருக்கும் கிட்டி
   கிட்டியே உலக மாற்றங்காணும்
   குறைவின்றி ஞானியர்கள் துணைபுடைசூழ
6. சூழவே கலித்துன்பங்களை விரட்டும்
   குருவாக ஆறுமுகன் என் அவதாரமாக விளங்கி
   இடரின்றி ஞானிகளின் துணையோடு
   இந்த உலகத்தை மாற்ற நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–